258 எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

**யூனிலீவர் ஸ்ரீலங்கா மாற்றுத்திறன் கொண்ட பணியாளர்களுடன் பன்மைத்துவம் மற்றும் சேர்க்கையை உள்வாங்கியுள்ளது**

*தனது நுகர்வோர் ஈடுபாட்டு மையத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு துணிச்சலுடன் புதிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது*

**கொழும்பு, செப்டெம்பர் 02, 2021:** நாட்டில் மிகப் பெரிய விரைவாக விற்பனையாகின்ற நுகர்வோர் பொருட்கள் நிறுவனங்களில் ஒன்றான யூனிலீவர் ஸ்ரீலங்கா, நாட்டின் முன்னணி தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை வெளிச்சேவையமர்வு நிறுவனமான Scicom Lanka உடன் இணைந்து தனது நுகர்வோர் ஈடுபாட்டு மையத்தை மீண்டும் தொடங்கியுள்ளது. இதன் மூலமாக தனது நுகர்வோர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட, உயர் மட்ட மற்றும் பிரத்தியேகமான சேவைகளை வழங்கவுள்ளது. ஒரு நியாயபூர்வமான மற்றும் சமூக ரீதியாக உள்ளடக்கப்பட்ட உலகிற்கு பங்களிக்கும் அதன் இலட்சியத்திற்கு துணையாக, யூனிலீவர் மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட 3 ஆம் தரப்பு ஊழியர்களை உள்வாங்கி, தனது புதிய நுகர்வோர் ஈடுபாட்டு மையத்தில் பன்மைத்துவம் மற்றும் சேர்க்கையை ஊக்குவிப்பதற்கான அதன் நிகழ்ச்சிநிரலை வலுப்படுத்தியுள்ளது.

நடப்பதில் சவால்கள் உள்ள மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட 3 ஆம் தரப்பு ஊழியர்களின் தேவைகளை எளிதாக்க, யூனிலீவர் அதற்குத் தேவையான உள்கட்டமைப்பிற்கு உதவியுள்ளதுடன், வீட்டு வசதிகளைக் கொண்டு முழுமையான பணி ஆற்றலை வழங்குவதற்கும் முதலீடு செய்துள்ளது. புதுப்பிக்கப்பட்ட நுகர்வோர் ஈடுபாட்டு மையம் டிஜிட்டல் முறையில் இயக்கப்படுகின்ற, பன்முக மார்க்க நுகர்வோர் சேவை கட்டமைப்பாக காணப்படுவதுடன், மற்றும் இலங்கையில் விரைவாக விற்பனையாகின்ற நுகர்வோர் பொருட்கள் துறையில் உலகளாவிய கட்டணமில்லா குறும் குறியீட்டைக் (1323) கொண்ட ஒரே அழைப்பு மையமாகவும் உள்ளது. நுகர்வோருக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பொருத்தமான மற்றும் துல்லியமான தகவல்களுக்கு உதவ, எளிதில் தொடர்பு கொள்ளக்கூடிய மற்றும் மிகவும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அணியைக் கொண்டுள்ளதுடன், சரியான நேரத்தில் மற்றும் முழுமையாக அவர்களின் அக்கறைகளை நிவர்த்தி செய்கிறது.

பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை தொடர்பான இந்த சாதனை முயற்சி குறித்து **யூனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளத் துறை பணிப்பாளரான அனன்யா சபர்வால்** அவர்கள் கூறுகையில், *"எங்கள் ஊழியர்கள் எல்லா வேறுபாடுகளையும் தாண்டி உண்மையிலேயே ஒத்துழைக்கக்கூடிய ஒரு அரவணைப்புடனான சூழலை தோற்றுவிக்க பல ஆண்டுகளாக முயற்சித்து வருவதற்காக நாம் அவர்களைப் போற்றிப் பாராட்டி வருகிறோம். எமது முன்கள பணியாளர்கள் முதற்கொண்டு தலைமைத்துவ அதிகாரிகள் வரை அவர்களின் பின்னணி தொடர்பான பாரபட்சமின்றி கடந்த சில ஆண்டுகளாக பாலின சமத்துவத்தை அதிகரிக்க முடிந்தது என்பதில் நாங்கள் பணிவும், பெருமிதமும் கொள்கின்றோம். இப்போது, மாற்றுத் திறனாளிகள் எங்கள் சூழல் கட்டமைப்பில் இணைய ஒரு வாய்ப்பை உருவாக்கியுள்ளோம். கருவுறுதல் காப்பீடு, வீட்டு வன்முறை தொடர்பான உதவி மற்றும் சிறப்பு நலன் லீவு போன்ற பல அரவணைப்பு கொள்கைகளை நாம் அண்மையில் அறிமுகப்படுத்தியிருந்தோம். பன்மைத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு கொண்ட இலங்கையைத் தோற்றுவிக்கும் ஒரு மகத்தான பயணத்தில் எம்முடன் கைகோர்க்க முன்வருவதற்கு ஆர்வமுள்ள இலங்கையிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் பகிர்ந்து, கற்றுக்கொள்வதை நாம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்,"* என்று குறிப்பிட்டார்.

இதனை மீண்டும் தொடங்குவது குறித்து, **யூனிலீவர் ஸ்ரீலங்காவின் நுகர்வோர் ஈடுபாட்டு மையத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரியான சுகித பிரேமரத்ன** அவர்கள் கூறுகையில், *"இலங்கையின் முன்னணி வருங்கால தேவைக்கான தீர்வு மையமாக இருக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன், கடந்த இரண்டு தசாப்தங்களாக நாங்கள் நுகர்வோர் மற்றும் வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்குவதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்துள்ளோம். தினந்தோறும் 1,000 க்கும் மேற்பட்ட மக்களை இவ்வாறு எட்டி வந்துள்ளோம். பன்மைத்துவத்தும் கொண்ட, திறமையான நபர்களின் புதிய அணி மூலம் இந்த இலட்சியத்தை அடைய ஒரு படி நெருங்க எங்களுக்கு உதவ Scicom எங்களுடன் கைகோர்த்துள்ளமை எமக்கு மிகுந்த உற்சாகம் அளிக்கின்றது,"* என்று குறிப்பிட்டார்.

**யூனிலீவர் ஸ்ரீலங்காவின் நுகர்வோர் சந்தை நுண்ணறிவுகளுக்கான பணிப்பாளரும், தெற்காசியாவிற்கான மக்கள் தரவு மையத்தின் கொத்தணி பணிப்பாளருமான சந்தன் அகர்வால்** அவர்கள் தனது கருத்துக்களை பகிர்ந்து கொள்கையில், *"யூனிலீவரில், எங்கள் நுகர்வோரே எப்போதும் எங்களது முன்னுரிமை. ஒவ்வொரு வருடமும் மாறிவரும் தேவைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அவர்கள் தொடர்பான நுண்ணறிவுதான் எங்களுக்கு உதவுகிறது. இப்போது, முன்னெப்போதையும் விட, நாம் வேகம் மற்றும் சுறுசுறுப்புடன் அவர்களுக்கு பதிலளிக்க வேண்டியது கட்டாயமாகிவிட்டது. அதனாலேயே எங்கள் மேம்பட்ட நுகர்வோர் ஈடுபாட்டு மையம் வலுவான தயாரிப்பு அறிவு, வணிக புத்திசாலித்தனம், பிரச்சினைகளை தீர்க்கும் திறன், கருணை, நட்புறவு கொண்ட மனப்பான்மை மற்றும் எமது நுகர்வோருக்கு உயர் மட்ட சேவையை வழங்க தேவையான ஏனைய அனைத்து பண்புகளையும் கொண்ட ஒரு தனித்துவமான, பன்மைத்துவமான மற்றும் சேர்க்கை அரவணைப்புடனான அணி மூலம் நுகர்வோர் ஈடுபாட்டுக்கு மீள்வரைவிலக்கணம் வகுப்பதன் மூலமாக நாம் தொடர்ந்து முன்னிலை வகிப்பதற்கு இடமளிப்பதற்கும்,"* என்று குறிப்பிட்டார்.

யூனிலீவர் ஸ்ரீலங்கா தனது ஊழியர்களுக்கு நியாயமான வாய்ப்புகள், தகவல் மற்றும் வளங்களை வழங்க பல கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளுடன், ஒரு சமத்துவமான பணியிடத்தை உருவாக்க பல முயற்சிகளை பல ஆண்டுகளாக முன்னெடுத்துள்ளது. நிறுவனம் ஏற்கனவே உலகளவில் 50/50 பாலின பன்மைத்துவத்தை அடைந்துள்ளது மற்றும் உள்நாட்டில் இந்த இலக்கை அடைய முயற்சித்து வருகிறது. தற்போது அதன் முகாமைத்துவ அணியில் 55% பெண்களாகவும், அதன் பணியாளர்களில் 31% பெண்களாகவும் காணப்படுவதுடன், அதன் பேபி கொலோன் உற்பத்தி ஆலை முழுமையாக பெண்களால் இயக்கப்படுகிறது. மிக அண்மையில் அது தனது ஹொறணை உற்பத்தி தொழிற்சாலையில் முதன்முதலாக பெண்களைக் கொண்ட உற்பத்தி மற்றும் நிர்வாக தளத்தை அறிமுகப்படுத்தியது.